


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.12.2023) தலைமைச் செயலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் அவர்கள் சந்தித்து, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் ஒரு மாத சம்பளத் தொகையான 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கினார். உடன் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பாலாஜி, எம்.பாபு மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.12.2023) தலைமைச் செயலகத்தில், அசோக் லேலண்ட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் முதன்மைச் செயல் அலுவலர் ஷேனு அகர்வால் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 3 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அசோக் லேலண்ட் நிறுவனத்தின் பெருநிறுவன சமூக பொறுப்புத் தலைவர் (CSR) என்.வி. பாலசந்தர், துணைத் தலைவர் டி. சசிகுமார் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.12.2023) தலைமைச் செயலகத்தில், PSG குழுமத்தின் லீப் கிரீன் எனர்ஜி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜீவ் கார்த்திகேயன் மற்றும் நிறுவனர் மற்றும் முதன்மைச் செயல் அலுவலர் தேவ் ஆனந்த் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா உள்ளார்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 4வது மண்டலத்தில் உள்ள கன்னட பாளையம், சமத்துவபுரம், அன்னை அஞ்சுகம் நகர், சசிவர்தன் நகர், ஆகிய பகுதிகளில், நாடாளுமன்ற குழு தலைவர், கழக பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள், மிக்ஜாம் புயல் மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கினார். இந்நிகழ்வில் தாம்பரம் மாநகரச் செயலாளர் / தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, மேயர் திருமதி. க.வசந்தகுமாரி, துணை மேயர் ஜி.காமராஜ், தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் அழகுமீனா ஐ.ஏ.எஸ்., மண்டல குழுத்தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், எஸ்.சேகர், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், அதிகாரிகள் உள்ளனர்.




நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு தலைமையில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா முன்னிலையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அகற்றப்பட்ட நீர்த்தேக்கங்கள், விழுந்த மரங்கள் மற்றும் குப்பைகள், பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்புப் பணிகள், சீரான மின் விநியோகம், குடிநீர் விநியோகம் உள்ளிட்ட களப்பணி நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (09.12.2023) ரிப்பன் கட்டட கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் ஹனீஸ் சாப்ரா, சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், நகராட்சி நிருவாக இயக்குநர் சு.சிவராசு, காணொலிக் காட்சியின் வாயிலாக மண்டல கண்காணிப்பு அலுவலர்கள், கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர், துணை ஆணையர் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட, வேளச்சேரி, மடிப்பாக்கம், பள்ளிக்கரணை பகுதி மக்களுக்கு 5வது நாளாக நேற்று முன்தினம் (9.12.2023) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு 1/2 லிட்டர் பால் பாக்கெட் 8000, பிஸ்கெட் 16000, சுவீட் பன் 5000, சேமியா, ரவா 500, கோதுமை 5500, அரிசி 5கிலோ பேக் 3000, அரிசி 4 கிலோ பேக்500, அரிசி 2 கிலோ பேக் 7500, வாட்டர் பாட்டில்1000, கைலி 10000, போர்வை14000, டவல்3800, சேலை1500, நைட்டி 3500, குழந்தைகள் துணி 500, பாய் 5000 மற்றும் மருந்துப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு 9000 ஆகிய நிவாரணப் பொருட்கள், சுமார் 20 லாரிகளில் கொண்டு சென்று நேரில் வழங்கினார்.

